திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்சினையில் இப்படி அமைச்சரைப் பழி வாங்க வேண்டுமென்கிற நோக்கத்தோடு, திட்டமிட்டு செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இது அவையினுடைய உரிமையை மீறுவதாகக் கருதப்படுகிறது. இது குறித்து விதி 162-ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விதி 67-ல் உறுப்பினர் எவரைப்பற்றியும் மானக்கேடான, அவைக்கு ஒவ்வாத வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாதென்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே 67 ஆம் விதியில் தனிப்பட்ட முறையிலும் தாக்கக்கூடாது என்றும் இருக்கிறது. இவ்வளவு விதிமுறைகளையும் மீறி ஒரு பத்திரிகை ஆசிரியர் மோசடி செய்து கொண்டிருக்கிறார். இது அவை உரிமையை மீறியதாகக் கருதி, இதை உரிமைக் குழுவுக்கு அனுப்பி, விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இதுகுறித்து 'தினகரன்' ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை வழங்குகிறேன்.

3. க[illegible]

நெல்லை மாவட்டம், மேலப்பாவூர் கிராமத்தில் இரு பிரிவினர் மோதிக் கொண்டு வெடி குண்டுகள் வீசப்பட்டு 20 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"நெல்லை மாவட்டத்தில் மேலப்பாவூர் கிராமத்தில் இரு தரப்பினர் மோதிக்கொண்டதில் வெடிகுண்டுகள் வீசப்பட்டு 20 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து".

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவரமான அறிக்கை@ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

@ 121-122 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1986 ஏப்ரல் 28]

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே அண்மையிலே நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலே ஏற்பட்ட வெற்றி தோல்வி அடிப்படையிலே இரு குழுவினருக்கு இடையே மோதல் ஏற்பட்டு அதற்குப் பின்னாலே இந்தச் சேதங்கள் ஏற்பட்டிருப்ப தாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதலிலே நடைபெற்ற சம்பவம் 26—2—1986-லே நடைபெற்றிருக்கிறது. 26—2—1986 அன்று அமைதிக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக்கூடச் சொல்லப்பட்டிருக்கிறது.

26—3—1986-க்குப் பின்னாலே காவல் துறையினரோ மற்ற தொடர் புடைய துறையினரோ சற்று விழிப்பாக இருந்திருந்தால், உரிய நடவடிக்கை களை காலத்தே எடுத்திருந்தால், 23—3—1986 அன்று மீண்டும் ஒரு மோதல் ஏற்படக்கூடிய சூழ்நிலையைத் தவிர்த்திருக்க முடியும். சதா கலவரம் ஏற்படக் கூடிய அளவுக்கு சூழ்நிலை உருவாவதற்குக் காரணம், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய காவல் துறையினர் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்காதது. அதனால் பிரச்சினை வளர்ந்துகொண்டே செல்வதாக அறிகி றோம். அந்த அளவுக்கு நிலைமைகள் வளர்ந்த பின்னும் நடவடிக்கை ஏதும் எடுக்காததன் காரணமாக, 20 வீடுகளுக்கு மேல் சேதம் அடைந்திருப்ப தாகவும் செய்திகள் வருகின்றன. ஆனால் சேதத்தினுடைய அளவு குறை வாக இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வாறு சேதமடைந்த வர்களுக்கு நட்ட ஈடு தரப்பட்டிருக்கிறதா? அதுகுறித்து ஏதேனும் கோரிக்கை வந்திருக்கிறதா என்ற விவரத்தையெல்லாம் அறிய விரும்பு கிறேன்

(முற்பகல் 10-45)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவரவர்களே, 25—2—1986 அன்று நடைபெற்ற அந்தச் சம்பவம் தொடர்பாக காவல் துறை வழக்கு ஒன்றைப் பதிவு செய்து, 7 பேர்களைக் கைது செய்தும் இருக்கிறார்கள். அதைப்போலவே இன்னொரு பிரிவினர் மீதும் 26—2—1986-ல், அதை எதிர்த்து சில நிகழ்ச்சிகளில் ஈடுபட்டபோது, வழக்குப் பதிவு செய்து 15 பேர் களை காவல் துறையினர் கைது செய்திருக்கிறார்கள். ஆகவே காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரி வித்திருப்பதால், இந்த அறிக்கையை அவர்கள் முழுமையாக, கூர்ந்து கவன மாகப் படிக்கவில்லையோ என்று நான் கருதுகிறேன். ஆகவே நட வடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அமைதிக் கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டு, இரு தரப்பாருமே சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதில்லை என்றும், அமைதியாக இருக்கிறோமென்றும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அதற்குப்

பிறகு, மீண்டும் மீண்டும் உணர்ச்சி வயப்பட்ட அல்லது தூண்டிவிடப்படுகின்ற இளைஞர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற செய்தி அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த இளைஞர்களையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு சமுதாயத்திலுள்ள அனைவருக்குமே இருக்கிறது. அது காவல் துறைக்கு மாத்திரம் உரியதல்ல. இன்றைக்கு இளைஞர்களைத் தூண்டி விடுகிற நிகழ்ச்சிகள், அரசியலின் ஒரு பகுதியாகக்கூட மாறியிருக்கின்றன. அதனுடைய விளைவுதான் சமுதாயத்தினுடைய அமைதியைக் குலைக்கின்ற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் என்பதையும் தலைவரவர்களின் மூலமாக நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனாலும், மீண்டும் மீண்டும் தூண்டிவிடப்படுகின்ற இளைஞர்கள் அல்லது அவர்களைத் தொடர்பு கொண்டிருக்கிறவர்கள் கலவர முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட பல பேர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேலும் எடுத்து வழக்குகள் பதிவு செய்த சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இப்போது இறுதியாக அவர்கள் இதுபோல் எந்தச் சச்சரவுகளிலும் ஈடுபடுவதில்லை; அமைதியாக இருக்கிறோம் என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதிலே காவல் துறை சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற தகவல் இதுவரை அரசுக்குக் கிடைக்கவில்லை. இருந்தாலும் அதிகாரிகளுடைய விசாரணையின் விளைவாக என்ன முடிவு அரசுக்குத் தரப்படுகிறதோ, அதை அரசு ஆராய்ந்து, ஒருவேளை அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதற்கு யாராவது தவறியிருந்தால், அவர்கள் மீது தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே வீடுகள் தாக்கப்பட்டதாகவும், சேதமடைந்ததாகவும் உறுப்பினரவர்கள் இங்கே தகவல் சொல்கிறார்கள். அரசுக்கு அதுபற்றி தகவல் வரவில்லை. அது வந்ததற்குப் பிறகுதான், அந்த விசாரணையையொட்டி நடவடிக்கை எடுக்கப்படுகிறபோதுதான், அதற்கும் தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இயலும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, அந்த அறிக்கையை நான் ஆழ்ந்து படித்ததற்குப் பின்னாலேதான் அமைச்சரவர்களிடம் வினாவை எழுப்பினேன். நான் ஆழ்ந்து சொன்னதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆழ்ந்து கவனிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். நான் சொன்னது, 26—2—1986-ல் ஒரு அமைதிக் குழு ஏற்பாடு செய்து, இனிமேல் அந்தச் சம்பவங்கள் அப்படி நடைபெறாது என்ற உத்தரவாதம் பெறப்பட்டு, காவல் துறையினர் சென்றதற்குப் பின்னாலே, மீண்டும்

நெல்லை மாவட்டம், மேலப்பாவூர் கிராமத்தில் இரு பிரிவினர் மோதிக்கொண்டு வெடிகுண்டுகள் வீசசப்பட்டு 20 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

1986 ஏப்ரல் 28] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

21—3—1986-ல் முன்பு நடந்த போராட்டத்தைப் போன்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்போது அமைதிக் குழு ஏற்படுத்தியதோடு காவல் துறையின் கடமை முடிந்துவிட்டது என்பது சரிதானா? அதுபற்றிக் கண்காணிக்கப் பட வேண்டாமா? மீண்டும் அப்படிப்பட்ட பிரச்சினை எழக்கூடுமென்று காவல் துறை ஆய்வு செய்ய வேண்டாமா? அல்லது ஒற்றர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள வேண்டாமா? ஆகவே இவைகளையெல்லாம் கடைப் பிடித்திருந்தால், மீண்டும் நாட்டு வெடிகுண்டு போடும் அளவுக்கு சேதப் படுத்தும் அளவுக்கு நிலைமைகள் 21—3—1986-ல் ஏற்பட்டிருக்காது. அதனால்தான் காவல் துறையினர் சரிவரச் செயல்படவில்லை என்று சொன்னேன். அதே நேரத்தில் அந்த நாட்டு வெடிகுண்டு எங்கேயிருந்து வந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? வழக்குப் பதிவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. வெடிகுண்டு எங்கிருந்து வந்தது என்ற மூலாதாரத்தைக் கண்டுபிடித்து, அதை அறவே அழிப்பதற்கு அல்லது இனிமேல் அப்படிப்பட்ட சம்பவம் ஏற்படாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது? இப்போது மக்களிடத்திலே மிகப் பெரிய பீதி ஏற்பட்டிருக்கிறது; அச்ச நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவரவர்களே, பிப்ரவரி 26 ஆம் தேதி சம்பவத்திற்குப் பிறகு 21—3—1986-லே மீண்டும் அங்கு கலவரம் வெடித்திருக்கிறது, ஏன் முன் ஜாக்கிரதையாக காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்று உறுப்பினரவர்கள் கேட்டார்கள். அப்போது நாம் நிகழ்ச்சியைத் தொடங்கியது 25 ஆம் தேதி. உடனடியாக காவல் துறை நடவடிக்கை எடுத்து, வழக்குப் பதிவு செய்து, கைதும் செய்யப்பட்டிருக் கிறது. ஒரு அமைதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அமைதிக் கூட்டம் நடந்து முடிந்திருக்கிறது. இதிலே சம்பந்தப்பட்ட இரு தரப்பாருமே தாங்கள் இனிமேல் அமைதியாக இருக்கிறோம், எந்தக் கலவரத்திலும் ஈடுபடவில்லை என்று சொன்னதற்குப் பிறகு, வேறு என்ன பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியும், எடுக்க இயலும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருதுகிறார் என்று தெரியவில்லை. ஆகவே அமைதி இருக்கக்கூடாது என்று எங்கேயோ ஒரு சக்தி தமிழகத்திலே வேலை செய்து கொண்டிருக்கிறது. அவர்கள் 20 நாள் அல்லது 25 நாள் பொறுத்துப் பார்த்து, அங்கு இவ்வளவு அமைதியாக இருக்கிறதே. கலவரம் மூளவில்லையே. சாதிச் சண்டையாக வரவில்லையே என்று எண்ணியோ என்னவோ, புதிதாக 21—3—1986-ல் தொடங்கியிருக்கிறார்கள்.

நெல்லை மாவட்டம், மேலப்பாவூர் கிராமத்தில் இரு பிரிவினர் மோதிக்கொண்டு வெடிகுண்டுகள் வீசசப்பட்டு 20 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

[திரு. இராம. வீரப்பன்] [1986 ஏப்ரல் 28

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-50)

நான் இங்கே பல செய்திகளை இந்த அவைக்குத் தெரிவிப்பதன் மூலம் நாட்டு மக்களுக்குத் தெரிவித்து, தேவையற்ற குழப்பங்களையும் மனமாச்சர்யங்களையும் உண்டாக்கக் கூடாது. காரணம் அரசாங்கத்திற்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது. நாட்டில் எப்படி வெடிகுண்டுகள் வந்தன என்று கேட்கிறார்கள். இன்றைக்கு நாடு முழுவதும் நாட்டு வெடிகுண்டுகள் வீசப் படுகின்றன. எப்படி வருகின்றன, எங்கேயிருந்து வருகின்றன என்று ஆராய்ந்துகொண்டுதான் இருக்கிறோம். தடயங்கள் கிடைத்துக் கொண்டு தான் இருக்கின்றன. எல்லாத் தடயங்களையும், கிடைத்திருக்கிற எல்லாத் தகவல்களையும் இங்கே சொல்லிக் கொண்டிருப்பது என்பது பாதுகாப்புக்குரிய நடவடிக்கையாக இருக்காது. ஆகவேதான் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என்று மட்டும் சொல்கிறோம். எனவேதான் அந்த வகையில் சொல்லுகிறேன், இளைஞர்களைத் தூண்டி விடுகிறார்கள். 21 ஆம் தேதி இதில் ஈடுபட்டவர்கள் இளைஞர் அணியினர் என்ற பெயரோடு ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்தவர்கள், ஒரு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், தூண்டி விடப்பட்டு அவர்களும் உணர்ச்சி வசப்பட்டு கலந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலும் தொடர்ந்து சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. 25 ஆம் தேதி, 26 ஆம் தேதி என்று நடைபெற்றிருக்கின்றன. 25 ஆம் தேதி நடைபெற்றதற்கு எதிராக 26 ஆம் தேதி காலையில் நடந்தது. பிறகு சமாதானமாகிவிட்டது. மீண்டும் 22, 23, 24 நாட்கள் கழித்து 21—3—1986-ல் இது தொடங்கப்பட்டது. அதுதான் திட்டமிடப்பட்டு தொடங்கப்பட்டது என்று தெரிகிறது. 21, 22, 23 நாட்கள் கழித்து தொடர்ந்து இந்தப் பகுதியில்தான் நாட்டு வெடிகுண்டு வீசப்படுகிறது. ஆகவே எங்கே தீய சக்திகள், சமுதாயத்தில் அமைதியைக் குலைக்கிற சக்திகள் இருக்கின்றன என்பதை அரசு மாத்திரம் கண்டுபிடித்து தீர்க்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்களும் நாமெல்லாரும் சார்ந்திருக்கிற அரசியல் கட்சிகள் சமுதாயத்தின் அமைதியிலும் நல்வாழ்விலும் அக்கறை கொண்டிருக்கிற அனைவரும் இதில் ஈடுபட்டு தடுத்தாக வேண்டும். அந்த முயற்சியில்தான் அரசு ஈடுபட்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்ற வேண்டுகோளைத்தான் இந்த நோக்கில் நான் அரசின் சார்பில் தெரிவிக்க இயலும்.